057

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் சிறப்புக் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

மட்டம் - 05

**SNU5535/ESU3235 – விசேட கல்விசார் கல்விக்கான உளவியல்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 18.01.2025 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. உள்ளடங்கல் வகுப்பறையில் இயலாமைகளுடைய மாணவர்களுடன் பணிபுரியும் ஆசிரியருக்குக் கல்வி உளவியலின் நன்மைகளைச் சுருக்கமாக விளக்குக.

2. உள்ளடங்கல் வகுப்பறையில் கற்கும் மாணவர்களின் பல்வகைத் தேவைகளை அடையாளம் காணக் கல்வி உளவியல் தொடர்பான அறிவு மற்றும் திறன்களைப் பயன்படுத்தும்போது நீங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை?

3. அறிவு சார் இயலாமைகள் உள்ள மாணவர்கள் அன்றாட வாழ்க்கைச் செயற்பாடுகளைச் சமாளிப்பதில் எதிர்கொள்ளும் சவால்கள் யாவை? பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

4. ஓட்டிசத் திருசிய ஒழுங்கீனம் (ASD) உள்ள மாணவர்களின் விருத்தியில் சுற்றுச்சுழற் காரணிகளின் பங்கை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

5. முதிர்ச்சி என்ற பதத்தினை விளக்கி, விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களின் கற்றற் செயல்முறையை முதிர்ச்சி எவ்வாறு பாதிக்கிறது என்பதை ஆராய்க.

6. இயலாமைகளையுடைய பதின்ம வயதினர் இலங்கையின் பாடசாலை முறைமையுடன் இணைக்கப்படும் போது அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை எடுத்துக்காட்டுக்களுடன் ஆராய்க.

7. விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களை அவர்களின் கற்பித்தல் - கற்றற் செயல்முறையை உள்ளடங்கல் வகுப்பறையில் எவ்வாறு ஊக்குவிக்கிறீர்கள் ஐந்து (05) உத்திகளை முன்வைக்குக.

8. தகவற் செயன்முறையின் போது புலன் சார் குறைபாடுள்ள குழந்மைகள் எதிர்கொள்ளும் சவால்களை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. i. தகவற் செயன்முறை மாதிரியின் முக்கிய படிகளை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

ii. இயலாமைகள் உள்ள மாணவர்களின் கற்றலுக்கான தகவற் செயன்முறை மாதிரியைப் பயன்படுத்தும் போது, உள்ளடக்கல் வகுப்பறையில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் குறைந்தது ஐந்து (05) சவால்களை விவரிக்குக.

**(06 புள்ளிகள்)**

iii. கற்பித்தல் - கற்றற் செயன்முறையில் இயலாமைகள் உள்ள மாணவர்களின் கவனத்தைத் தக்கவைக்க நீங்கள் பயன்படுத்தக்கூடிய ஐந்து (05) உத்திகளை விளக்குக.

**(08 புள்ளிகள்)**

10. i. பரிசோதனை சார் பிள்ளை நடத்தை ஆய்வு முறைகள் மற்றும் பரிசோதனை சாரா பிள்ளை நடத்தை ஆய்வு முறைகளுக்கு இடையேயான குறைந்தது நான்கு (04) வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

ii. இயலாமைகளையுடைய பிள்ளைகளைப் பற்றி ஆராயப் பொருத்தமான பிள்ளை நடத்தை ஆய்வு முறையைத் தேர்ந்தெடுத்து, குறித்த பிள்ளை நடத்தை ஆய்வு முறையை நீங்கள் தேர்ந்தெடுத்தமையை நியாயப்படுத்துக.

(06 புள்ளிகள்)

iii. இயலாமைகளையுடைய பிள்ளைகளின் நடத்தையை ஆய்வு செய்ய மேலே நீங்கள் குறிப்பிட்ட பிள்ளை நடத்தை ஆய்வு முறையை எவ்வாறு பயன்படுத்துவீர்?

(08 புள்ளிகள்)

11. i. பீ. எவ். ஸ்கின்னரினால் (B. F. Skinner) முன்மொழியப்பட்ட மீளவலியுறுத்தற் கோட்பாட்டின் கொள்கைகளைச் சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

ii. உள்ளடங்கல் வகுப்பறையில் மீளவலியுறுத்தற் கோட்பாட்டின் உத்திகளை எவ்வாறு நடைமுறைப்படுத்துவீர் என்பதை எடுத்துக்காட்டுக்களை மேற்கோள் காட்டி விளக்குக.

(06 புள்ளிகள்)

iii. விசேட கல்வி அலகில் இடமளிக்கப்பட்ட விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களின் சுய – ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலை (Self – Regulated Learning) மேம்படுத்தத் திட்டக் கற்றல் (Programmed Learning) முறையின் மூன்று (03) நன்மைகளை ஆராய்க.

(08 புள்ளிகள்)

12. i. உள்ளடங்கல் வகுப்பறையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஊக்கற் கோட்பாடுகளைப் பற்றி அறிந்து கொள்வதன் முக்கியத்துவத்தை விளக்குக.

(06 புள்ளிகள்)

ii. மாஸ்லோவால் முன்மொழியப்பட்ட ஊக்கல் கோட்பாட்டை விளக்குக.

(06 புள்ளிகள்)

iii. "மாஸ்லோவின் கோட்பாடு இயலாமைகள் உள்ள மாணவர்களுக்குப் பொருந்தாது" உதாரணங்களை மேற்கோள் காட்டி மேலே உள்ள கூற்றினை ஆராய்க.

(08 புள்ளிகள்)

13. i. இரண்டு (02) ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணங்களை முன்வைத்து "ஆளுமை" என்ற எண்ணக்கருவை விளக்குக.

(06 புள்ளிகள்)

ii. விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளிடையே சமநிலை ஆளுமையை விருத்தி செய்வதன் முக்கியத்துவத்தை விவரிக்குக.

(06 புள்ளிகள்)

iii. இலங்கைப் பாடசாலைகளில் விசேட கல்வித் தேவையுடைய மாணவர்கள் மத்தியில் சமநிலை ஆளுமையை விருத்தி செய்வதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களை விளக்குக.

(08 புள்ளிகள்)

14. i. விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களில் பொருத்தமான சமூக மற்றும் மனவெழுச்சி சார் நடத்தைகளை விருத்தி செய்வதில் உள்ளடக்கல் வகுப்பு ஆசிரியர்களின் பங்கை விளக்குக.

**(04 புள்ளிகள்)**

ii. விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களிடம் பொருத்தமான சமூக மற்றும் மனவெழுச்சி சார் நடத்தைகளை உருவாக்க ஒரு ஆசிரியராக நீங்கள் செயற்படுத்தக்கூடிய **மூன்று (03)** உத்திகளை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

iii. உங்கள் பாடசாலைகளில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களிடையே பொருத்தமான சமூக மற்றும் மனவெழுச்சி சார் நடத்தைகளை விருத்தியாக்குவதில் நீங்கள் எதிர்கொள்ளும் **நான்கு (04)** சவால்களை ஆராய்க.

**(08 புள்ளிகள்)**

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*



09